மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ் நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்' என்ற பெயரில் மாணவர்கள் தயாரிக்கும் படப்பிடிப்புக்காகவும், குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் படம் எடுப்போர் ஆகியோருக்கு தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம் மற்றும் 5 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவுக் கேடயத்தையும் தமிழக அரசு வழங்கி வருகிறது. மேலும், 2001–02 ஆம் ஆண்டு மூன்றாம் ஆண்டு இயக்குதல் பிரிவு மாணவர் திரு. பிரபு ராதாகிருஷ்ணன் எடுத்த பட்டயக் குறும்படம் 'பரமபதம்' என்ற படத்திற்கு தேசிய திரைப்பட விருதுவான வெள்ளித் தாமரை பதக்கம் மற்றும் ரூபாய் 5 ஆயிரத்திற்கான காசோலை பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது. இன்று தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளும் பயன்படக்கூடிய வகையிலே பல்வேறு பணிகளை மேற்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்களுடைய கோரிக்கையும் சிந்திக்கப்படும் என்பதைக் கூறிக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

நிதியமைச்சர் பதிலுரை குறித்து திரு. மு. கருணாநிதி தெரிவித்த கருத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இதே அவையில் சில பத்திரிகைச் செய்திகளை வைத்து அந்தச் செய்திகளுடைய நிலையை அறிவதற்கு இந்த அவையில் எழுப்பப்பட்ட நேரங்களில், பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளையெல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு அவையிலே பேச முடியாது என்று அமைச்சர்களும், முதலமைச்சர் அவர்களும்கூடத் தெரிவித்திருக்கின்ற செய்திகள் இந்த அவையினுடைய குறிப்பிலே

இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படி இருக்கும்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்னளி மானியக் கோரிக்கைகள் முந்தைய நேர்வுகளிலே விவாதமின்றி நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்கின்ற செய்தியை இந்த அவையிலே ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள். அப்படி இந்த அவையிலே கூறப்பட்ட செய்தியை – ஒரு பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு பொது மேடைகளிலே அந்தச் செய்தியின் மூலமாக மக்களிடத்திலே விபரீத எண்ணங்களை ஏற்படுத்துகின்ற அளவுக்கு ஒரு தரம் மிகுந்த, மூத்த முதலமைச்சராக இருந்தவர் குறிப்பிடுகிறார் என்று சொன்னால், அதைப்பற்றிய விளக்கம் இந்த அவைக்கு அவசியம் தேவைப்படுகிறது என்கின்ற நிலையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவையில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் குறித்து அவைக்கு வெளியிலே பேசுவது அவை உரிமை மீறிய செயல் என்பதை, மாண்புமிகு அண்ணன் சந்தானம் அவர்கள், அந்தப் பொருள்படும்படி குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். திரு. கருணாநிதி அவர்கள் அவைக்கு வருவதும் இல்லை, அவை விவாதங்களில் கலந்துகொள்வதும் இல்லை, அவை விவாதங்கள் எப்படி நடைபெறுகின்றன, என்னென்ன பேசப்படுகின்றன என்று குறிப்புகளைப் பார்ப்பதும் இல்லை. அவற்றை விடுத்து, அவையை மிகவும் அவமதிக்கின்ற முறையில் அவைபற்றிய நிகழ்வுகளை வெளியில் விமர்சிப்பது, உண்மை அறியாமல் விமர்சிப்பது கண்டிக்கத்தக்க ஒன்று என்பது உண்மை நிலை. நான் அவையிலே பேசுகிறபோது Vote on Account on Demands for Grants, அதாவது முன்னளி மானியக் கோரிக்கைகள்மீது பேரவையில் விவாதம் நடைபெற்று, பின்னர் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதுபற்றிப் பேசினேன். Vote on Account on Demands for Grants, அதாவது முன்னளி மானியக் கோரிக்கைகள்மீது பேரவையில் விவாதம் நடைபெற்று, பின்னர் பலமுறை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; விவாதம் இன்றியும் முன்னளி மானியக் கோரிக்கைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அன்றையதினம் விவாதமின்றி இத்தகைய மானியக் கோரிக்கைகள் அவையில் ஈடேற்றப்பட்டது குறித்து முன்னுதாரணங்களைக் குறிப்பிட்டேன். அவையில் நான் பேசியவற்றை அவைக் குறிப்பிலிருந்து முழுமையாகப் படித்துப் பார்த்தால் நான் அவையில் குறிப்பிட்டது

2004 ஜூலை 27] [திரு. சி. பொன்னையன்]

சரியானது என்பது தெளிவுபடும். திரு. கருணாநிதி அவர்கள் அவைக்கு வருவதன் மூலமாகவோ அல்லது அவையில் நடக்கும் விவாதங்களை முழுமையாகப் படிப்பதன் மூலமாகவோதான் அவையில் நடக்கும் உண்மை நிலைகளை அவர் தெரிந்துகொள்ள இயலும். அவையில் பேசப்படும் முழுச் செய்திகளும் பத்திரிகைகளில் சில நேரம் முழுமையாக வருவதில்லை. பத்திரிகைகளில் வரும் செய்திகளை மட்டும் நம்பி, அவைக்கு வராத ஒரு சட்டமன்ற உறுப்பினர், அவைக்கு வெளியே பேரவை உரிமை மீறும்வகையில் தவறாகப் பேசுவதோ, தவறாக எழுதுவதோ, அவை உரிமை மீறும் முறையற்ற செயலாகும். இதைத்தான் மாண்புமிகு அண்ணன் சந்தானம் அவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். முன்னாள் முதலமைச்சராக அவர் இருந்தபோது, பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை அப்படியே நம்பிக்கொண்டு பேசக்கூடாது என்று அவர் கூறியிருக்கிறார் என்பதைத்தான் மாண்புமிகு அண்ணன் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். இந்தப் பிரச்சினை, அவை உரிமை மீறல் குழுவிற்குப் பேரவையால் அனுப்பப்பட்டுவிட்டது. பேரவைக்கு வெளியே பேசுவதற்கும் எழுதுவதற்கும் பதிலாக அவை உரிமை மீறல் குழுவிற்கு நேரில் வந்து, திரு. கருணாநிதி தனது கருத்துகளை விளக்கலாம்; விளக்கிக்கூற வேண்டும். அவை உரிமை மீறல் குழுவிற்கு நேரில் வந்து, அவைக் குறிப்புகளை அவை உரிமைக் குழு மூலமாக நேரில் படித்துப் பார்த்து உண்மை நிலைகளைப் புரிந்துகொள்ளலாம், புரிந்துகொள்ள வேண்டும். அவை உரிமை மீறல் குழுவிற்கு ஏற்கெனவே இந்தப் பிரச்சினை பேரவையால் அனுப்பப்பட்டுள்ளது. அவை உரிமை மீறல் குழு உண்மை நிலை என்ன, அவர் பேசுவதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதனைச் சட்டப் பேரவை விதிகளுக்குட்பட்டு வெளிப்படுத்துகின்ற உண்மை நிலையை உணர்ந்து அவர் செயல்பட வேண்டும். இதை மட்டுமே நான் அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11–10

3. அறிவிப்பு

தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.